ॐ



# சின்மய ஆனந்த கீதம்

## இசை வேள்வி - பிரசாதம்

இலங்கை சின்மயா மிஷன்

ஏற்பாட்டில்

நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காக

# சின்மய ஆனந்த கீதம்

# *(Chinmaya Ananda Geetam)*

## இசை வேள்வி

CHINMAYA MISSION

வெளியீடு:-

**இலங்கை சின்மயா மிஷன்**


21/1, டீ க்ரெட்சர் வீதி, கொழும்பு-04.

தொ.பே: 586618 தொ.மடல்: 074-519530

ஸ்ரீ பக்த அனுமான் ஆலயம்,


48 கி.மீ. கண்டி-நுவரெலியா வீதி, இராமபோதை.

தொ.பே: 052-59645

# சின்மய ஆனந்த கீதம்

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 21-08-2002 | இராமகிருஷ்ண மிஷன்,<br>கொழும்பு. |
| 22-08-2002 | கண்டி கலாசார மையம்,<br>ஹவன் ஹலா, கண்டி. |
| 23-08-2002 | ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மண்டபம்,<br>மாத்தளை. |
| 24-08-2002 | ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில்,<br>திருகோணமலை. |
| 25-08-2002 | கலைமகள் சனசமூக நிலையம்<br>வவுனியா |
| 26-08-2002 | ஸ்ரீ துர்க்கையம்மன் மணிமண்டபம்,<br>நல்லூர், யாழ்ப்பாணம். |



**சுவாமி சின்மயானந்தா**

# ஆச்சாரியாரின் செய்தி

நாட்டில் நிரந்தர அமைதி திரும்புமா? இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நீடிக்குமா? பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகுமா? பலன் தருமா? இருதரப்பினருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய தீர்வுவருமா? அல்லது மீண்டும் கொடுமையான யுத்தம் தொடருமா.....? எங்கள் குழந்தைகள் சாகுமா......?

இப்படிப் பலதரப்பட்ட கேள்விகளை மனதில் சுமந்து கொண்டு மக்கள் பரிதவிப்பதை கண்ணுற்றவுடன்...... இதற்கு நம்மால் என்ன செய்யமுடியும் என்று சிந்திக்கலானேன்.

அப்பொழுதுதான் எங்கள் மிஷனைச் சேர்ந்த சிரேஷ்ட சுவாமினி அம்மா பூஜ்ய விமலானந்தாஜி இலங்கைக்கு விஜயம் செய்தார்கள். சென்னையைச் சேர்ந்த எங்கள் மிஷனின் இளைஞர்கள், யுவதிகள் எவ்வாறு இந்தியாவில் பல இடங்களிலம் "பஜன் சந்தியா"க்கள் நடத்தினார்கள்..... அந்த நிகழ்வுகள் எவ்வாறு அமோக வரவேற்பைப் பெற்றது போன்ற பல விடயங்களையும் சுவாமினி அம்மா எடுத்துக் கூறினார்கள்.

அப்பொழுது தான் "சின்மய ஆனந்த கீதத்தின்" கரு உருவாகியது.

"நாமும் ஏன் அந்த அருமையான இளைஞர், யுவதிகளை வரவழைத்து நாட்டின் நிரந்தர சமாதானத்தை வேண்டிப் பஜன் சந்தியாக்கள் நடத்தக் கூடாது" என்று சிந்திக்கலானோம்.

இந்த எண்ணம் வலுப்பெற்றது. நாட்டில் தமிழர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களுக்கும் இந்த "இசை மூலம் பிரார்த்தனை" என்ற இசை வேள்வியினை எடுத்துச் செல்வோம் என்று திட்டமிட்டோம்.

அதன் பயனாகவே இந்த சின்மய ஆனந்த கீதம்

21-08-2002 கொழும்பிலும்
22-08-2002 கண்டியிலும்
23-08-2002 மாத்தளையிலும்
24-08-2002 திருகோணமலையிலும்
25-08-2002 வவுனியாவிலும்
26-08-2002 யாழ்நகரிலும்

ஒழுங்கு செய்யப்பட்டது.

அனைத்து மக்களையும் வரவழைத்து.... அருமையான கீதம் இசைத்து..... இறைபுகழ் பாடி "இறைவா எங்களுக்கு நற்கதி அருளாயோ" என்று மனமுருகப் பிரார்த்தித்தால், கருணையே உருவான கடவுள் கரையாமலா போகும்.

நாட்டிற்கு ஒரு நல்ல விடிவுகாலம் வரும். மக்கள் மீண்டும் அச்சம் அகன்று ஆனந்தமாக வாழத்தான் போகிறார்கள் என்ற திடநம்பிக்கையுடன் இதனை முன்னெடுத்துச் செல்கிறோம்.

இந்த இசைவேள்வியின் சிறப்பு என்னவெனில்;

* இந்தியாவிலிருந்து, அருமையாகப் பாடக்கூடிய இளைஞர் யுவதிகள் இறைவன் புகழ்பாட வர இருக்கிறார்கள்.
* அவர்களுடன் நம் நாட்டின் புகழ்பெற்ற வாத்தியக் கலைஞர்கள் இணைந்து கொள்வார்கள்.
* இந்தியாவில் "கலாக்ஷேத்திரா"வில் தேர்ச்சி பெற்ற நம் நாட்டு நடனக் கண்மணிகளும் இதில் கலந்து கொள்வார்கள்.

ஆன்மீக உணர்வினை உண்டுபண்ணும் ஆனந்த கீதம்..... கீதத்திற்கு ஏற்ற நடனம்..... நடனத்துடன் இறைவனின் திருவிளையாடல்களைச் சித்தரிக்கும் ஒளி பொருந்திய காட்சிகள்.

ஆகமொத்தம் ஆனந்தத்தில் திளைக்கச் செய்யும் அற்புத ஆன்மீக விருந்து.

இதில் பங்குபெறும் நீங்கள் அனைவரும் பெரும் பாக்கியசாலிகள்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

இறைபணியில்,
**ரமண சைதன்யா**
ஆச்சாரியார், இலங்கை சின்மயா மிஷன்.

08-08-2002

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

## திருவாசகம்

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

## திருவிசைப்பா

இடர்கெடுத்தென்னையாண்டு கொண்டென்னுள்
இருட்பிழம்பற வெறித்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள் ளொளிவிளக்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப் பாகாவம்பலக் கூத்தா
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப்பரந்து நின்றாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுதலுடைய தோர் களிற்றுமாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்

**********

"பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேசத்தால் ஈசனைத் தேடு." - *ஔவையார்* -

# பஜனை பாடல்கள்

## (1) ஸ்ரீ விக்ன ராஜம் பஜே

ஸ்ரீ விக்ன ராஜம் பஜே
சந்ததமஹம் குஞ்ஜர முகம் கடக சுதம்
சங்கரீ சுதம் தமீஹா (ஸ்ரீ)

சேவித சுரேந்த்ர மஹணீய குணசீலம்
ஜபதப சமாதி சுகம் வரதானுகூலம்
பாலித சுர முனிகன பக்த பரிபாலம்
பயங்கர விஷங்க மாதங்க குல காலம் (ஸ்ரீ)

கனக கேயூர ஹாராவலி கலித கம்பீர
கௌர கிரி ஷோபம் சுஷோபம்
காமாதி பய பலித மூட மத கலி கலுஷ
கண்டிதம் அகண்ட ப்ரதாபம் ப்ரதாபம்
சனக சுக நாரத பதஞ்ஜலி பராசர
மதங்க முனி சங்க சல்லாபம் சல்லாபம்
சத்யபரம் ஜனயன ப்ரமுத முக்தி பர தத்வமஸி
நித்ய நிகமாதி ஸ்வரூபம் (ஸ்ரீ)

## (2) கந்த வடிவேலா

கந்த வடிவேலா குமரா கந்த உமை பாலா
சந்தன பொட்டழகா முருகா தாமரை பூவழகா
வெள்ளி வேல் அழகா முருகா விபூதி பொட்டழகா
புள்ளி மயில் அழகா முருகா வள்ளி புலத்தழகா

ஆறுபடை உடையாய் முருகா ஆனந்தம் தந்திடுவாய்
ஆறுதலை உடையாய் முருகா ஆறுதல் தந்திடுவாய்
ஆறுமுகத்துடனே வந்து எங்கள் இடர்கள் தீர்த்திடுவாய்
அனைவரும் போற்றும் வந்து எங்கள் ஆண்டவன் நீதானய்யா
(கந்த)

காவியுடையழகா முருகா கஸ்தூரி பொட்டழகா
சேவற் கொடி அழகா முருகா சிந்தூர பொட்டழகா
வள்ளி தெய்வானையுடன் மயில்மேல் நடனம் ஆடிவரும்
கடவுள் உந்தனைப்போல் முருகா கண்கண்ட தெய்வமுண்டோ
(கந்த)

## (3) வில்லினை ஒத்த

வில்வினை ஒத்த புருவம் வளைத்தனை
வேலவா வடி வேலவா
அங்கோர் வெற்பு நொறுங்கி பொடி பொடி ஆனது
வேலவா வடி வேலவா

சொல்லினை தேனில் குழைத்துரைப்பாள்
சிறு வள்ளியை சிறு வள்ளியை
கண்டு சொக்கி மரமென நின்றனைதேன்
மலை காட்டிலே மலை காட்டிலே

கல்லினை ஒத்த வலிய மனங்கொண்ட
பாதகன் சிங்கன் பாதகன்
அவன் கண்ணிரண்டாயிரம் காக்கை கிரையிட்ட
வேலவா வடி வேலவா

பல்லினை காட்டி வெண் முத்தைப் பழித்திடும்
வள்ளியை குற வள்ளியை
ஒரு பார்ப்பன கோலம் தரித்து கரம் தொட்ட
வேலவா வடி வேலவா

## (4) ஹர ஹர பஹே கங்க தாரா

ஹர ஹர ஹர ஹர ஹர ஹர ஹர ஹர ஹர கங்கே
ஹர ஹர ஹர ஹர ஹர ஹர பஹே கங்க' தாரா
கங்காஜீ கோ சிவ நே ஷீஷ் மே உதாரா (ஹர)

கல கல சல சல ஜல ஜல
பூந்த் பனே ஜல் ஜல்தர
கங்காதர சிவ சங்கர விஷிதர் தர் விஷ்வம்பர்

ஹர....... கங்கே
பா கம்பர ஷஷிதர நே சுருஷ்டி கோ சவாரா
ஹர (3) ஹர (3) பஹே கங்கா தாரா

தரதி அம்ப தர தர பவன சலே சர சர சர
தான தான் மதுர கான் விதினாகா விதி விதான்
ஹர (3) ஹர (3) ஹ(ர)
ஹர (3) ஹர (3) பஹே கங்க தாரா

## (5) யாதுமாகி நின்றாய்

யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் காளி தெய்வ லீலையன்றோ
பூதம் ஐந்தும் ஆனாய் காளி பொறிகள் ஐந்தும் ஆனாய்
போதமாகி நின்றாய் காளி பொறியை விஞ்சி நின்றாய்.

எந்த நாளும் நின்மேல் தாயே இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனை பயந்தாய் தாயே கருணை வெள்ளம் ஆனாய்
மந்த மாருதத்தில் வானில் மலையினுச்சி மீதில்
சிந்தை எங்கும் செல்லும் அங்குன் செம்மை தோன்றுமன்றே.
(யாதுமாகி)

கர்ம யோகமொன்றே உலகில் காக்குமென்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும் இங்கே தவறலென்ப தின்றி
மருமமான பொருளாம் நிந்தன் மலரடிக்கண் நெஞ்சம்
செம்மையுற்று நாளும் சேர்ந்து தேசு கூடவேண்டும்
(யாதுமாகி)

காளி மீது நெஞ்சம் என்றும் கலந்து நிற்க வேண்டும்
வேளை யொத்த விறலும் - பாரில் வேந்த ரேத்தும் புகழும்
யாளி யொத்த வலியும் - என்றும் இன்பம் நிற்கும் மனமும்
வாழியீதல் வேண்டும் - அன்னாய் வாழ்க நின்றன் அருளே.
(யாதுமாகி)

## (6) ஸ்ரீ சக்ர ராஜ

ஸ்ரீ சக்ர ராஜ சிம்ஹாஸனேஸ்வரி ஸ்ரீ லலிதாம்பிகையே
ஆகம வேத கலாமய ரூபிணி அகில சராசர ஜனனி நாராயணி
நாக கங்கண நடராஜ மனோஹரி
ஞான விக்னேஸ்வரி ராஜ ராஜேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

பலவிதமாய் உன்னை ஆடவும் பாடவும்
பாடிக் கொண்டாடும் அன்பர் பத மலர் சூடவும்
உலகம் முழுதும் எந்தன் அகத்துள்ளே காணவும்
ஒரு நிலை தருவாள் காஞ்சி காமேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றிட கூட்டி வைத்தாய்
நிழலென தொடர்ந்த முன்னோர் கொடுமையை நீக்கம் செய்தாய்
நித்ய கல்யாணி பவானி பத்மேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

துன்ப புடத்திலிட்டு தூயவன் ஆக்கி வைத்தாய்
தொடர்ந்த உன் மாயம் நீக்கி பிறந்த பயனைத்தந்தாய்
அன்பை புகட்டி உந்தன் ஆடலைக் காணச்செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண்டேஸ்வரி (ஸ்ரீ சக்ர)

## (7) குரு

சத்குருவைப் பார்த்து பார்த்து மகிழவும் வேண்டும்
சத்குருவின் நாமங்களைச் சொல்லவும் வேண்டும்

சத்குருவின் சேவையெல்லாம் செய்யவும் வேண்டும்
சத்குருவின் பாதங்களைப் பணியவும் வேண்டும்

எந்தப் பிறவி எடுத்தாலும் சத்குருநாதா
உனைமறவாத வரம் தருவாய் சத்குருநாதா
உலகமெல்லாம் தேடினாலும் சத்குருநாதா
உன்னைப்போல கிடைத்திடுமோ சத்குருநாதா
(சத்குருநாதா)

பர்க்கும் கருணைப் பார்வையினால் சத்குருநாதா
எங்கள் பாபமெல்லாம் பறந்திடுமே சத்குருநாதா
எல்லையில்லாக் கருணையினால் சத்குருநாதா
எங்கள் எல்லோரிடமும் அன்பு வைத்தாய் சத்குருநாதா
(சத்குருநாதா)

சர்வ லோக பூஜித ஸ்ரீ சத்குருநாதா
சர்வ ஜகன் மோக்ஷித ஸ்ரீ சத்குருநாதா
சின்மயானந்த குரு சத்குருநாதா
சச்சிதானந்த குரு சத்குருநாதா

## (8) ராமா ஹோ

ராமா ஹோ ராமா ஹோ ராமா ஹோ ராமா ராமா
ஜீவன் சாகர் மேரே பையா நையா சதா படாயே ஜா
ப்ரபு கோ பிஸ்ராயேஜா,
ராம ரமையா கயே ஜா
ஜீவன் சாகர மேரே பையா (ராமாஹோ)

சாகர் மே ஹோதே ஹை லஹரே லஹரோ மேது:.பான்
ஜீவன் மே சுக் துக் ஜோ ஆயே வோ பீ ஜசா ஜாயே
சுக் ஒளர் துக் கே இஸ் ஜீலே மே மஸ்தி சதா படாயே ஜா
ப்ரபு கோ நா பிசுராயே ஜா, ராம் ராமையா காயே ஜா
ஜீவன் சாகர் மேரே பையா (ராமாஹோ)

தீபக் நே காலி ராதோ சே டர்னா ந ஜானா
மாயா ஜனஜாலோ சே தூ மி கபீ ந தபரானா
மன்சிலோ துஜே ஜரூர் மிலேகே யே விஷ்வாஸ் படாயேகே
ப்ரபு கோ நா பிஸி ராயே ஜா
ராம் ரமைய்யா காயே ஜா
ஜீவன் சாகர் மேரே பையா (ராமாஹோ)

## (9) ஹமே மையாரே

ஹமே மையாராரே கோகுல் காம்னா
ஹே மாரு, மாரு மயி வேஷ் வாணு காவா
மையாராரே கோகுல் காம்னா (ஹமே)

மதுரா நீ வாட மயி வேஷ் வாணு நிஷ்டுர்
நட் நட் தே நந்த கிஷோர் மாங்கே சே பாண்சுரி
ஹே....... மாரு
மாரு தானு தேவா கே லேவா
மையாராரே கோகுல் காம்னா (ஹமே)

யமுனா நே சீர் வால்ஹோ பாண்சுரி பஜாயேதோ
புலாவே பானு ஷான் உங்கூடி ஜகாட்தோ
ஹே...... மாரு
மாரு ஜாக் ஜீவா ஜே ஜாவா
மையாராரே கோகுல் காம்னா (ஹமே)

நரஸீனோ நந்த கிஷோர் லாயிகடோ பானுஜீ
உத்தாரே ஆத்மா கி பாவா பினா பாருஜீ
ஹே....... மாரு
ஹையா நீ வாட் கேவா ஆவ்யா
மையாராரே கோகுல் காம்னா (ஹமே)

## (10) தந்தனானா

தந்தனானா ஹே தந்தனானா புரே
தந்தனானா பல தந்தனானா பல தந்தனானா

ப்ரம்மம் ஒகடே பர ப்ரம்மம் ஒகடே பர
ப்ரம்மம் ஒகடே பர ப்ரம்மம் ஒகடே (தந்தனானா)

கந்துவகு ஹீனதிகரு பிந்து லெவு
அந்தரிகி ஸ்ரீஹரி அந்தராத்மா (ஹரே)
இந்துலு ஜந்தகுலம் அந்த நொகடே
அந்தரி ஸ்ரீ ஹரி அந்தராத்மா (தந்தனானா)

நிந்தரு ராஜி நிந்திரின்சு நித்ரயுனொகடே
அந்தலே பன்டு நித்ர அயுந்நொகடே
மெந்தயின ப்ரம்மாண்டு மெட்டு பூமி ஒகடே
சண்டாலு துந்தெதி சரி பூமி ஒகடே (தந்தனானா)

கடகி எனுகு மேத கயு யெந்தொகடே
புதமி சுனகாமு மேத பொதயு யெந்தொகடே
கலு புண்யலனு பாப கர்முலனு சரி காவா
ஜடயு ஸ்ரீ வெங்கடேஸ்வரு நாமம் ஒகடே(தந்தனானா)

## (11) வீர மாருதி

வீர மாருதி கம்பீர மாருதி
தீர மாருதி அதி தீர மாருதி
கீத மாருதி சங்கீத மாருதி
தாஸ மாருதி ராம தாஸ மாருதி
பக்த மாருதி பரம பக்த மாருதி (வீர மாருதி)

***********

# HEAL THE WORLD

There's A Place In Your Heart

And I Know That It Is Love

And This Place Could be Much Brighter Than Tomorrow

And If You Really Try You'll Find There's No Need To Cry

In This Place You'll Feel There's No Hurt Or Sorrow

There Are Ways To Get There If You Care Enough For The Living

Make A Little Space Make A Better Place...

Chorus:

*****

Heal The World Make It A Better Place

For You And For Me And The Entire Human Race

There Are People Dying If You Care Enough

For The Living Make A Better Place

For You And For Me

*****

If You Want To Know Why There's A Love That Cannot Lie

Loves Is Strong It Only Cares For Joyful Giving

If We Try We Shall See In This Bliss We Cannot Fear Or Dread

We Stop Existing And Start Living

Then It Feels That Always Love's Enough For Us Growing

So Make A Better World Make A Better World...

Repeat Chorus

And The Dream We Were Conceived In Will Reveal A Joyful Face

And The World We Once Believed In Will Shine Again In Grace

Then Why Do We Keep Strangling Life Wound This Earth Crucify Its Soul

Though It's Plain To See This World Is Heavenly

Be God's Glow

We Could Fly So High Let Our Spirits Never Die

In My Heart I Feel You Are All My Brothers

Create A World With No Fear

Together We Cry Happy Tears

See The Nations Turn Their Swords Into Plowshares

We Could Really Get There If You Cared Enough For The Living

Make A Little Space To Make A Better Place...

Repeat Chorus

Repeat Chorus

Repeat Chorus

There Are People Dying If You Care Enough For The Living

Make A Better Place For You And For Me

There Are People Dying If You Care Enough For The Living

Make A Better Place For You And For Me

You And For Me (11)

# சின்மயா மிஷன் – ஓர் அறிமுகம்

கங்கை நதியானது இமயத்தில் தோன்றினாலும், அங்கேயே தங்கிவிடாமல், கீழே பாய்ந்து வந்து அனைவருக்கும் நன்மை பயப்பதுபோல், அமிர்தமயமான இறைஞானமும், இந்து தர்மமும் உலகெலாம் பரவி அறியாமையைப் போக்கி அனைவருக்கும் ஆறுதல் அளிக்க வேண்டும் என்று எண்ணி 1951 டிசம்பர் மாதம் குருதேவர் சுவாமி சின்மயானந்தா பூனே (மஹாராஷ்டிரா- இந்தியா) விநாயகர் கோயிலிலிருந்து தன்னுடைய ஞானயக்னத்தைத் தொடங்கினார்.

இடைவிடாது நாற்பது ஆண்டுகளுக்கு மேல் அல்லும் பகலும் ஆன்மீக உயர்வை அளிக்கவல்ல உபநிடதங்களையும், கீதையையும் குருதேவர் உலகெங்கும் சென்று உபதேசித்து வந்தார். அதுமட்டுமல்ல தன்னுடன் சேர்ந்து இந்த ஞானகங்கையை உலகெலாம் எடுத்துச் செல்ல ஒரு பெரிய துறவியரின் படையையே உருவாக்கினார். தற்போது சின்மயா மிஷனில் சுமார் 250 துறவியர் 25 நாடுகளில் சுமார் 300 க்கும் மேற்பட்ட கிளைகள் மூலம் இந்த இறைப்பணியை ஆற்றி வருகின்றனர்.

இறைப்பணியோடு நில்லாது கல்விப்பணி, சமூகப்பணி மற்றும் இன்னும் பல அரிய சமுதாய மறுமலர்ச்சிப் பணியையும் உலகச் சின்மயா இயக்கம் ஆற்றி வருகிறது.

## சின்மயா இயக்கத்தின் குறிக்கோள் என்ன?

**குறிக்கோள்:**

மத, இன, மொழி வேற்றுமையின்றி அனைவருக்கும் ஆன்மீக ஞானத்தை அளித்து, அக மறுமலர்ச்சிக்கும், ஆனந்தத்திற்கும் வழிவகுக்கும் நடைமுறைப் பாதையைக் காட்டி, அனைவரையும் ஆக்கபூர்வமான மானுட சேவையில் வழிநடத்திச் செல்வது.

## உலகெங்கும் ஆற்றிவரும் முக்கிய பணிகள்

### ஆன்மீகப் பணி

- குழந்தைகளிடம் நல்லியல்புகளையும் இறைசிந்தனையையும் வளர்க்க பாலவிஹார் வகுப்புகள்.
- இளைஞர்களின் ஆக்கபூர்வமான ஆற்றல்களை நெறிப்படுத்தும் சின்மயா யுவகேந்திரா.
- சாதகர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உறுதுணையான ஆன்மீகச் சொற்பொழிவுகள், ஆன்மீக முகாம்கள், வாசகர் வட்டம், தேவியர் இயக்கம்.....
- இறைப்பணியில் ஈடுபடத் துடிக்கும் இளைஞர்களை வழிப்படுத்தும் ஆன்மீக பல்கலைக்கழகங்கள்.....

### கல்விப் பணி

- இந்தியா முழுவதும் இயங்கி வரும் 70 க்கு மேற்பட்ட சின்மயா வித்தியாலயங்கள்.
- கிழக்கத்திய கலாசாரத்தையும், மேற்கத்திய கல்வி முறையையும் கலந்து கொடுக்கும் "சின்மயா இன்டர் நேஷனல் ஸ்கூல்" (கோயம்புத்தூர்).
- ஆளுமையை வளர்க்கும் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள்.....
- சமஸ்க்ருத ஆராய்ச்சி நிலையம்.

### சமூகப் பணி

- கிராமப்புறங்களை முன்னேற்றும் சிறுதொழில் பயிற்சிக் கூடங்கள்.
- இலவச மருத்துவ முகாம்கள்.
- நிவாரணப் பணிகள் (குஜராத் பூகம்ப நிவாரணப்பணி).
- முதியோர் இல்லங்கள்......

## இலங்கை சின்மயா மிஷன்

1981 ஆம் ஆண்டு குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் இலங்கை விஜயத்தின்போது ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சின்மயா மிஷன் தற்போது கொழும்பிலும், இராமபோதை யிலும் (Rambodha) இயங்கிவருகிறது.

கொழும்பு, பம்பலப்பிட்டி டீக்ரெட்ஸர் இடத்தில் அமைந்துள்ள ஆன்மீக மையம் குருதேவரின் இலட்சி யத்தை நிறைவேற்றும் முகமாக பல அரிய ஆன்மீக சேவையை ஆற்றி வருகிறது. அதில் குறிப்பிடத்தக்கவை.

1. ஆன்மீக தொடர் சொற்பொழிவுகள்.
2. வாராந்திர சமய சொற்பொழிவுகள்.
3. சாதகர்களுக்கான வாசகர் வட்டம்.
4. இளைஞர்களுக்கான ஆன்மீக வகுப்புகள்.
5. குழந்தைகளுக்கான பாலவிஹார் வகுப்புகள்.
6. தேவியரின் பூஜை, பஜனை.
7. சமஸ்க்ருத வகுப்புகள்.
8. யோகா பயிற்சி.
9. சமயக் கருத்தரங்குகள்.
10. ஆன்மீகப் புத்தக வெளியீடுகள்.

இது தவிர கண்டி, மாத்தளை, திருகோணமலை மற்றும் மலைநாட்டில் செய்துவரும் சமயப் பிரச்சாரங்கள்.

இலங்கை சின்மயா மிஷன் தன்னுடைய முக்கிய செயல்திட்டமாக இராமபோதை (Rambodha) யில் பெரிய அனுமன் ஆலயம் அமைத்துள்ளது.

இதை ஆன்மீக கலாசாலையாக, மலைநாட்டில் பல சமூக சேவைகள் செய்வதற்கு ஏற்ற மையமாக, சாதகர் கள் தங்கி இளைப்பாறிச் சாதனைகள் புரியும் தவபூமியாக அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இறைவனின் திருவருளால் அனைவரும் இதனால் பயன்பெற்று, பண்பட்டு நிலையான ஆனந்தத்தை நோக்கிச் செல்வோமாக!

ஓம் தத் சத்

# இராமபோதை
# ஸ்ரீ பக்த அனுமன் ஆலயம்

உடல் நலனையும் ஆரோக்கியத்தினையும் பேண உடல்பயிற்சிக்கூடங்கள் உதவுவது போன்றும், மருத்துவ விஞ்ஞானத்திற்காக வைத்தியசாலைகள் இருப்பது போன் றும், உண்மை என்னும் ஆன்மீக விஞ்ஞானத்தின் தள மாக இருப்பது கோயில்கள் ஆகும்.

ஆன்மீக உண்மையினை சிந்திப்பதற்கும், தியானிப்ப தற்கும் மனிதமனம் அமைதிநிலையில் நிலைத்திருப்பதற்கு மான சூழலை ஆலயங்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன என்கிறார் சுவாமி சின்மயானந்தாஜி அவர்கள்.

ஆம்! 1980ம் ஆண்டுகளில் குருதேவர் சுவாமி சின்ம யானந்தாஜி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இராமபோதைக்கும் சென்றார். கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரத்திலுள்ள இந்தக் கிராமத்தில் ஸ்ரீ அனு மன் தனது பாதங்களைப் பதித்துச் சென்றதாகக் கரு தப்படுகிறது. இது நடந்தது சீதையைத் தேடி இலங்கைக்கு வந்தபோது ஆகும். தமது விஜயத்தில் இந்த இயற்கை யழகில், அமைதியான மலையின் எழிலில் கட்டுண்டு, இறையருளால் ஆட்கொள்ளப்பட்ட குருதேவர் அவ்விடம் மிகப்பெரும் ஆன்மீக நிலையத்திற்கான இடம் என சங்கல்பம் கொண்டார். அவ்விடத்திற்கு இராமபோதை (Rambodha) என்ற பெயரையும் அவரே திருவாய் மலர்ந் தருளினார். இதன் பின்னர் வெவண்டன் மலையில் உச் சியில் 10 ஏக்கர் நிலத்தை இலங்கை அரசிடமிருந்து 1981ல் இலங்கை சின்மயா மிஷன் கொள்வனவுசெய்தது.

1996ம் ஆண்டில் பூஜ்ஜ சுவாமிஜி தேஜோமயானந்தாஜி அவர்கள் இலங்கைக்கு வருகைதந்தபோது அங்கு மாபெரும் ஆன்மீகத் திட்டத்தின் முதற்படியாக ஆலய நிர்மாணப் பணிக்குத் தனது ஆசியைத் தந்தருளியதுடன் திட்டத்தினையும் ஆரம்பித்துவைத்தார். உலகளாவிய சின்மயா இயக்கத்தின் தலைவராக விளங்கும் பூஜ்ஜ சுவாமிஜி தொடர்ச்சியாக முழுமையான ஆலோசனை களையும், பூரண ஒத்துழைப்பையும் வழங்கி குருதேவரின்

சங்கல்பம் செயலுருப்பெற வழிசமைத்தார். 08-04-2001 அன்று நடந்த மகாகும்பாபிஷேகப் பெருவிழாவிலும் பூஜ்ஜ சுவாமிஜி கலந்துசிறப்பித்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

இத்திருத்தலம் மூலமூர்த்தியாக 16 அடி உயரமான நின்ற நிலையிலுள்ள ஸ்ரீ ஆஞ்சனேயரைக் கொண்டு விளங்க விநாயகப்பெருமான், தட்சணாமூர்த்தி (Dhayaneshwar) மற்றும் சீதா, இலக்குவன் சமேத இராமச்சந்திரமூர்த்திகள் பரிவார மூர்த்திகளாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றனர். இங்கு ஓர் அற்புதமான தியான மண்டபமும் உண்டு.

இத்திருத்தலம் இலங்கையின் மத்திய பகுதியில் அழகான மலைகள் சூழ அமைந்துள்ளது. கொழும்பிலி ருந்து திருத்தலம் சுமார் 150 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. சுமார் 3-1/2 மணிநேரப் பயணத்தின் பின்பு இத்திருத்தலத்தை அடையலாம். நுவரெலியா - கண்டி நெடுஞ்சாலையில் 48km மைல்கல்லில் இருக்கும் இத்தலத்திலிருந்து 16km தூரத்தில் சீதாஎலிய, அசோக வனம், இராவண எலிய ஆகிய இராமாயண காலத்துச் சிறப்புமிகு இடங்கள் அமைந்துள்ளன.

இராமபோதை, இத்திருத்தலத்தினை மையமாகக் கொண்ட மகத்தான மாபெரும் ஆன்மீக நிலையம் இனி வரும் காலத்தில் இங்கு கட்டி எழுப்பப்பட இருக்கிறது. இங்கிருந்து மாபெரும் ஆன்மீகச் செல்வம் இலங்கைக்கும், உலகுக்கும் வழங்கப்பட இருக்கிறது. இந்தப் பெரும் பணியில் இலங்கை சின்மயா மிஷன் தீர்க்கமாக நடை போடுகிறது. இந்தப்பணியில் ஒவ்வொரு இந்துவும் தன் பங்கினை ஆற்றுவதன் மூலம் தம் வாழ்வையும். இவ்வு லக மக்களின் வாழ்வையும் ஒளிபெறச் செய்யவேண்டும்.

ஓம் தத் சத்!

*"**Hanuman** is the embodiment of all great divine qualities put together - Devotion, Dedication, Service, Dispassion, Strength, Humanity, Knowledge and every other virtue!"*

*- Swami Tejomayananda -*

# என்றென்றும் நன்றிகளுடன்...

* "சின்மய ஆனந்த கீதம்" இனிதே நிகழ நல்லருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு எம் முதல் நன்றிகள்,
* நம் நாட்டின் அமைதி வேண்டி நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்கு தம் ஆசிகளை வழங்கி எம்மை மகிழ்வித்த வணக்கத்திற்குரிய சுவாமி மித்ரானந்தாஜி அவர்களுக்கும்,
* "எண்ணித் துணிக கருமம்" என எம்மை ஊக்குவித்துச் சிந்தித்துச் செயற்பட வழிநடத்திய எம் பேரன்பிற்குரிய பிரம்மச்சாரி ரமண சைதன்யா அவர்களுக்கும்,
* எம் அழைப்பினை ஏற்று, இலங்கையின் ஆறு பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக இவ் இசை வேள்வியினை வெகுசிறப்பாக நடாத்திய சென்னை சின்மய யுவகேந்திராவினைச் சேர்ந்த எம் சகோதரர்களுக்கும்,
* மேலும் எம் பணிகளைச் செவ்வனே செய்ய எமக்கு உறுதுணையாக இருந்துவரும் இலங்கை சின்மயா மிஷன் அங்கத்தவர்களுக்கும்,
* இந்நிகழ்ச்சியின் வெற்றிக்காக அயராது உழைத்த வேகமும் விவேகமும் கொண்ட இலங்கை சின்மய யுவகேந்திராவினைச் சேர்ந்த எம் அன்புச் சகோதரர்களுக்கும்,
* இராகத்துடன் பாவ, தாளத்தினை இணைய வைத்து இவ் இசைச் சங்கமத்தை நடாத்த உதவிய நடன, வாத்தியக் கலைஞர்களுக்கும்,
* எம் நோக்கம் இனிதே நிறைவேற அனைத்து விதங்களிலும் ஒத்துழைப்பு நல்கி தம் கடமைகளைப் பொறுப்பாக நிறைவேற்றிய பிரதேச வாரியான இணைப்பாளர்கள் மற்றும் ஏனைய உதவியாளர்கள் அனைவருக்கும்,
* இவ்விழாவின் தேவை கருதி மனமுவந்து பொருளுதவி செய்து இறையருளைப் பெற்ற நல் உள்ளங்களுக்கும்,
* மேலும் இந்நிகழ்ச்சிக்கான ஊடக அனுசரணை வழங்கிய சக்தி T.V., சக்தி F.M. மற்றும் தினக்குரல் நிறுவனத்தினருக்கும்,
* இந்நூலினை நேர்த்தியாக யாத்து அன்பளிப்புச் செய்த லக்ஷ்மி அச்சகத்தினருக்கும்,
* இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவ் இன்னிசை நிகழ்ச்சி இனிதே நிகழ காலத்தால் அறிந்து ஒவ்வொரு வழியிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,

எம் மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

**செல்வி. கௌசல்யா கீதாஞ்சலி**
- நிகழ்ச்சி இணைப்பாளர் -

# சின்மயா மிஷன் வாக்குறுதி

நாம் ஒரு குடும்பமாக இருப்போம். அன்புடனும் மரி யாதையுடனும் ஒருவொருக்கொருவர் கட்டுப்பட்டிருப்போம். நாம் ஒரு சேனை மாதிரி உழைப்போம். தைரியத்துடனும், ஒழுக்கத்துடனும், நம் உள்ளும் புறமும் இருக்கும் எல் லாவிதத் தாழ்ந்த மனப்பான்மைகளையும் பொய்யான மதிப்பீடுகளையும் (கருத்துக்களையும்) எப்பொழுதும் எதிர்த்துப் போராடத் தயாராக இருப்போம். நாம் நேர்மை யாக (உண்மையாக) வாழ்வோம். தியாகமும் உழைப் புங்கொண்ட கம்பீர வாழ்க்கையும், நாம் உண்பதற்கு மேலாக அதிக உற்பத்தியைப் பெருக்கியும், நாம் எடுத்துக் கொள்வதற்கும் மேலாக அதிகமாகவும் கொடுப் போம். நாம் அந்த மகாப்பிரபுவின் கருணையை நாடுவோம். நம்மை நேர்மையான தைரியமான புத்திசாதுரியமான பாதையில் நடத்திச் செல்வதற்கு, அவருடைய கரு ணையும் நல்லாசியும் நம் மூலமாக, நம்மைச் சுற்றிலுமுள்ள இந்த உலகுக்குப் பரவட்டும். நாம் நம் தேசத்திற்கு உழைப்பது பிரபுவுக்கும் மேலான அந்த மகாப்பிரபுவிற்கு உழைப்பதாகவும், ஜனங்களுக்குக் காட்டும் பக்தி உள் ளம், அந்த எல்லாம் வல்ல சுயரூபிக்குக் காட்டும் பக்தி யாக நம்புகிறோம். நம்முடைய கடமைகளை நாம் உணர்ந்திருக்கிறோம். அவைகளைப் பூர்த்தி செய்ய எங்களுக்கு வேண்டிய சக்தியும் தைரியமும் கொடுத் தருள்வாயாக.

ஓம் தத் சத்

Printed by: **LUXMI PRINTER** - 195, Wolfendhal Street, Colombo 13. Tel: 448545, 458273, 473533 Fax: 330588